சுருக்கம்

தொழில் துறை –தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் –கோயம்புத்தூரில் டைசல் பயோ பார்க்–III அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.இ.1)துறை**

**அரசாணை (டி) எண்.113** **நாள்: 31.07.2014**
**ஜய, ஆடி 15,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:

> “கோயம்புத்தூர் பகுதியின் இட அமைப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளங்கள், சந்தை வாய்ப்புக்கள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலப்பரப்பில் 55 கோடி ரூபாய் செலவில் டைசல் பயோ பார்க்–III–ஐ டிட்கோ நிறுவனம் டைடல் பார்க் நிறுவனத்துடன் இணைந்து துவக்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இத்திட்டம் 500 அறிவியல் அறிஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், 500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் அளிக்கும்”.

2. மேற்கண்ட தொழில் வளர்ச்சி திட்டத்தினை தனது சொந்த நிதியிலிருந்தும் ஏனைய நிதி ஆதாரங்களிலிருந்தும் முறையான அனுமதி பெற்று செயல்படுத்தவும், இத்திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்பவும் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநருக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி –இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
நகல்
தொழில் (வசெதி) துறை, சென்னை – 600 009.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31.7.2014
பிரிவு அலுவலர்
31/7/14